ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1956/18 - 2016 මාර්තු මස 02 වැනි බදාදා - 2016.03.02

*1956/18 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 9/2011*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 72 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை, இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதியிலிருந்து பயனுறுமாறு, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இக்கட்டளைமூலம் உரித்தாக்குகின்றேன்.*

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
*2016, மாச்சு 02.*

**அட்டவணை**

*1. வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் J/271 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், சிறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள வலிகாமம் கிழக்குப் பிரிவில் புத்தூர் கோயிற்பற்றில் சிறுப்பிட்டியில் அமைந்துள்ளதும், "தம்பனை" என அழைக்கப்படுவதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். அதன் எல்லைகள் பின்வருமாறு :- கிழக்கில் : மூத்ததம்பி அருணாசலம் மற்றும் ஏனையோரின் காணி ; வடக்கில் : காலஞ்சென்ற மலவராயர் கந்தையா மற்றும் ஏனையோரினது மரபுரிமையாளர்களின் காணி ; மேற்கில் : கந்தையா அருணாசலம் மற்றும் ஏனையோரின் காணி, தெற்கில்: சின்னத்தம்பி கந்தையா மற்றும் ஏனையோரின் காணி ; பரப்பளவில் வரகுப்பயிர்ச் செய்கையைக் கொண்ட முப்பது பரப்புகளும் அதன்மீதுள்ள வேறெல்லாமும்.*

*இக்காணி, யாழ்ப்பாணக் காணிப்பதிவகத்தில் K 136/207 ஆம் இலக்கப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டிக் கோறளையில் உடுகஹாபத்துவவின் ஹோமாகம பிரதேச சபை எல்லையினுள் ஹோமாகம பிரதேச செயலாளர் பிரிவில் 603 ஆம் இலக்கத்தைக் கொண்டதும், கிரிவத்துடுவ வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கிரிவத்துடுவவில் அமைந்துள்ளதும், அளுபோகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பீ. எச். எம். எல். பிரேமச்சந்திர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006.04.19 ஆந் திகதிய 5869 ஆம் இலக்க வரைபடத்தில்*

குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டு E என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் மற்றும் சொல்லப்பட்ட வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டு 1/A என அடையாளமிடப்பட்டதுமான பிரிக்கப்பட்ட பாகமும். அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : யூ. பீ. அமரதாசவுக்குரிய மில்லகஹாவத்த ; கிழக்கில் : கல்பகே சேதிரிஸ் மற்றும் ஏனையோருக்குரிய அளுபோகஹாவத்த ; தெற்கில் : காணித்துண்டு 1/F மற்றும் 1/B ; அத்துடன் மேற்கில் : எஸ். டி. தர்மதாசவுக்குரிய அளுபோகஹாவத்த. பரப்பளவில் இது, அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பத்துப் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் இரண்டு ஐந்து மூன்று ஹெக்டெயார்களை (0.0253 ஹெக்டெயார்களைக்) கொண்டுள்ளது.

5869 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், கிரிவத்துடுவவில் அளுபோகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் மேற்சொல்லப்பட்ட காணியில் அமைந்துள்ளதும், காணித்துண்டு 1/F என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : காணித்துண்டு 1/A மற்றும் 1/B அத்துடன் 1245 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான காணியின் எஞ்சியுள்ள பாகம் ; கிழக்கில் : கல்பகேசேதிரிஸ் மற்றும் ஏனையோருக்குரிய அளுபோகஹாவத்த ; தெற்கில் : காணித்துண்டு 1/C ; மேற்கில் : காணித்துண்டு 1/B. பரப்பளவில் இது, பத்துத் தசம் ஒன்பது பேர்ச்சுக்களைக்கொண்ட காணி. (0ஏ.0றூ.10.9 பே.) பன்னிரெண்டடி அகலமான வீதி ஒதுக்கிடத்தின் மீதான செல்வழியுரிமையுடன் சேர்த்து, கொண்டுள்ளது.

இக்காணி ஹோமாகம காணிப் பதிவகத்தில் 104/93 ஆம் இலக்கப் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3- 488/1

---

ச.வ.பி. 9/2011

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 72 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், பயனுறுமாறு இதற்கான அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்தை, இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதியிலிருந்து பயனுறுமாறு 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இக்கட்டளைமூலம் உரித்தாக்குகின்றேன்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
2016, மாச்சு 02.

**அட்டவணை**

1. வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பத்துவவில் யாகம்பத்துக் கோறளையில் கஹாதெனிகமவில் அமைந்துள்ளதும், வட்டவளஹாவாவத்த மற்றும் வட்டவள ஹாவாவத்த எனவழைக்கப்படும் காணியின் உரிமம்பெற்ற நில அளவையாளர் எச். ஏ. எம். சீ. பண்டார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001.09.30 ஆந் திகதிய 3085 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், காணித்துண்டு 4 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலாக ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கில் : இக்காணியிலிருந்து ஓயாவுக்காக ஒதுக்கப்பட்ட காணி ; கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டு 05; தெற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள ஒரு வீதிக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணித்துண்டு 06; மேற்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டு 3. பரப்பளவில் இது, அதன் மீதுள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் மற்றெல்லாவற்றுடனும் சேர்த்து ஒரு றூட் இருபத்திநான்கு தசம் எட்டு ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 1 றூ. 24.85பே.) கொண்டுள்ளது.

சொல்லப்பட்ட 3085 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு 6 பின்வரும் எல்லைகளையுடையது:- வடக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டு 3 மற்றும் காணித்துண்டு 4 ; கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டு 5; தெற்கில் : கிரிகோரிஸின் மரபுரிமையாளர்களினாலும் மற்றும் ஏனையோரினாலும் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட காணி ; மேற்கில் : கப்பன்கமுவ - உடுபத்தாவ பிரதான வீதி. பரப்பளவில் இது, செல்வழி, பேணுகை மற்றும் சீராக்கல் உரிமையுடன் சேர்த்து பன்னிரெண்டு தசம் ஆறு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 12.6 பே.) கொண்டுள்ளது.

இக்காணி குளியாப்பிட்டி காணிப்பதிவகத்தில் பக்கம் R 72/74 மற்றும் 72/76 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3- 488/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.